முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் வேதாந்தச்சித்தர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

08.11.2018, வியாழக்கிழமை

1. **காப்பாக வந்தநல் ஆறுமுகனார்**
   **கலிகால அவதார அரங்கராசா**
   **காப்பாக அன்னதானம் துவக்கி**
   **கலியிடர் போக்கும் ஞான தேசிகா**
2. தேசிகனே உன் பெருமை கூறி
   தெரிவிப்பேன் ஒளி சூட்சும நூலை
   ஆசிபட **விளம்பி துலை திங்கள்**
   **அறிவிப்பேன் இருபானீர் திகதி குருவாரம்**
   **(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 22ம் நாள் 08.11.2018, வியாழக்கிழமை)**
3. **வாரமதில் வேதாந்தச்சித்தர் யானும்**
   வழங்குவேன் உலகோர் நலம் பெற
   அறமெனும் மகா சக்தி கொண்டு
   அகிலத்தை தரும உலகமாக்கும்
4. ஆக்குகின்ற குருவே அரங்கனே
   அற்புதம் நிகழ்த்தும் தருமனே
   ஊக்கமுடன் உன் வழிக்கு வர
   உலகமே பாதுகாப்பு அடையும்
5. அடையுமே அழிவில்லா லோகமாக
   அமையுமே ஆறுமுகன் தலைமையாக
   தடையில்லா மாற்றம் காண
   தட்டாது அரங்கமகான் கொள்கையை
6. கொள்கையை ஏற்பதுடன் சரணடைந்து
   குருராசன் தரும தவ பலத்தை
   ஆள்பவர்கள் அதிகாரிகள் மக்களென
   அனைவரும் அறிய வகை செய்து
7. செய்துமே சேவை எனக் கருதா
   செப்பிடுவேன் கடமை உரிமை என
   மெய்ஞான வழி ஏற்பதுடன்
   மேலான தருமம் வளர்த்து வர
8. வருகவே கலியுகம் தானும்
   வளர்ச்சிகளை மிகுதி கண்டு
   தரும பலம் பெருக பெருகவே
   தவராசன் வெளிப்பாடு தலைமை நிலை
9. நிலைபட சடுதி உறுதியாகி
   நிலவுலகே ஆனந்தப்படும்
   நிலையான நிம்மதி தருகின்ற
   நிலவுலகில் ஞானிகளின் ஆட்சி

10. ஆட்சி அமைதல் காண்கும்
ஆறுமுகனே ஆளுமை கூட்டிட
ஆட்சி நன்மை மிகுந்தநல்
அழியாமை தருகின்ற ஞானஆட்சியாக மாறும்

11. மாறுதலை செய்ய வந்தநல்
மகான் அரங்க ஞானி சூட்சுமம்
பேருலகோர் அறிந்து தொடர
பெரும் மாற்றமாம் பெரும்பேற்றை சடுதி காண்பர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் வேதாந்தச்சித்தர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

மக்களை கலியுக துன்பத்திலிருந்து மீட்டு அவர்களை காத்து வழிநடத்தி சென்றிட மகா குருவாய் முருகப்பெருமானின் அவதார ஞானியாய் வந்துதித்த ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானியே மக்களை தர்மமே காக்கும் என்றே தர்மத்தின் சக்தி துணையைக் கொண்டு காத்திடவே அளவிலாது அன்னதானம் செய்து கலியுகத்தின் துன்பத்தை போக்குகின்ற ஞானதேசிகனே அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 22ம் நாள் 08.11.2018, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே வேதாந்தச்சித்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் வேதாந்தச்சித்தர்.

அறம் என்கிற மகா சக்தியினைக் கொண்டு துன்பம்மிக்க இவ்வுலகை துன்பம் இல்லாத தரும உலகமாக ஆக்குகின்ற மகா ஞானகுருவே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியே, எல்லையில்லாது அற்புதங்களை நிகழ்த்துகின்ற தருமராசனே மக்களெல்லாம் முழுநம்பிக்கையோடு தாம் கூறும் தூயநெறிக்கு, தர்மத்தின் பாதைக்கு வந்து கடைப்பிடித்திட்டால் இவ்வுலகமே தருமத்தின் பாதுகாப்பை அடைந்து சிறக்குமப்பா.

தர்மத்தின் சக்தியை அடைந்திட்ட உலகம் அழிவில்லாத உலகமாக ஆகிடும். முருகப்பெருமானே தர்ம உலகத்திற்கு தலைமையாக அமைந்திடுவார். ஆதலினால் இவ்வுலகம் தடைகள் ஏதும் இன்றி முருகப்பெருமான் தலைமையில் தர்மஉலகமாக மாற்றம் அடைந்திடவே உலக மக்களெல்லாம் ஆறுமுக அரங்கமகானின் தூயநெறிக் கொள்கைகளை ஏற்பதுடன் அரங்கன் திருவடிகளிலே பயபக்தியுடன் சரணடைந்து அரங்கன் ஆற்றும் தானதருமப் பணிகளுக்கு தங்களது வினைகள் போகுமாறு தர்மம் வளர்க்க வேண்டும். தவராசன் தருமபலத்தினை பெருக்கும்விதமாக இவ்வுலகினை ஆட்சி செய்கின்றவர்களும், அதிகாரிகள், மக்கள் என அனைவரும் அரங்கனின் கொள்கைகளை, தருமத்தை, தவத்தை அறியுமாறு வகை செய்து தர்மம் செய்வதை சேவையாக கருதாமல் அவரவரும் தமது கடமையாக தமது உரிமையாக எண்ணி அரங்கன் மெய்ஞான வழிகளை ஏற்று மேன்மைமிக்க அரங்கன் தருமத்தில் பங்கு கொண்டு உலகின் தர்மத்தை வளர்த்து வர வேண்டும்.

அரங்கனின் தருமம் உலகின் தருமம். உலகின் தருமம் வளரவளர, துன்பம்மிக்க இந்த கலியுகம் மாறி நல் வளர்ச்சிகளை மிகுதியாக அடைந்து நிற்கும். தவராசன் அரங்கன் தருமபலம் பெருகபெருக, அரங்கமகா தேசிகனாரின் வெளிப்பாடு உண்டாகும். அரங்கனின் தலைமை நிலை உறுதியாகும். தருமம் பெருக பெருக அரங்கன் தலைமை விரைந்து உறுதியாகி இந்த உலகமே ஆனந்தப்படும்.

நிலையான நிம்மதி தருகின்ற வகையில் இவ்வுலகினில் ஞானிகளின் ஆட்சி விரைந்து அமையும். முருகப்பெருமானே நேரில் தோன்றி ஆட்சி அமைத்திடுவார். முருகப்பெருமானின் கீழ் அமையும் ஞானிகள் ஆட்சியான ஞானஆட்சி நன்மைகள் மிகுந்தநல் ஆட்சியாக மாறிடும்.

உலகப்பெருமாற்றம் செய்திட அவதாரமாக வந்திட்ட நல்மகான் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் சூட்சுமங்களை உலக மக்கள் அறிந்து தெளிவடைந்தும் அரங்கனை பணிந்து பின்பற்றி தொடர்ந்திட பெருமாற்றமாம் பெறுதற்கரிய பெரும்பேற்றை விரைந்து பெற்று சிறப்படைவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் வேதாந்தச்சித்தர்.

–சுபம்–